

முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ப.ரங்கநாதனின் சகோதரர் ப.லோகநாதன் மறைந்த செய்தி அறிந்ததும் கழகத் தலைவர் அவர்கள் அன்னாரின் இல்லத்திற்கு நேரில் சென்று மறைந்த லோகநாதன் அவர்களின் உடல் மீது மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, இரா.கிரிராஜன், பகுதிச் செயலாளர்கள் ஐ.சி.எப். வ.முரளிதரன், எ.நாகராஜன், வழக்கறிஞர் கே.சந்துரு, பி.டி.சி.ரவி, சி.மகேஷ்குமார், தேவஜவகர் மற்றும் கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.

# திருவள்ளூர் தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் க.பார்த்தசாரதி மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை. ஜூலை 28- பொன்னேரி தொகுதியில் 1991-ஆம் ஆண்டில், கழகத்தின் சார்பில் சட்டமன்ற கழக வேட்பாளராக போட்டியிட்டவரும், சோழவரம் ஒன்றிய முன்னாள் செயலாளரும், திருவள்ளூர் தெற்கு மாவட்டக் கழக துணைச் செயலாளருமான க.பார்த்தசாரதி (வயது79) 25.07.2026 சனிக் கிழமை அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

## த.வெ.க.அரசு அலட்சியம்!

# கரூர் மாவட்டத்தில் நீர் நிலைகளைப் பாதுகாத்திட விவசாயிகள் கோரிக்கை!

கரூர், ஜூலை.28. கரூர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள மானாவாரி நீர் நிலைகளை பாதுகாத்திட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். த.வெ.க. அரசின் அலட்சியத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு பொதுப்பணித்துறை நீர்நிலைகள் உள்கட்டமைப்புகளை வடிவமைத்தல், கட்டுதல் மற்றும் பராமரித்தல் போன்ற முக்கிய பணிகளை மேற்கொள்கிறது. த.வெ.க. அரசு அமைந்த பின்னர் ஏற்கனவே உள்ள திட்டங்களை தொடர்வதில் மெத்தனம் காட்டி வருகிறது. வெள்ளத் தடுப்பு மற்றும் நீர்வள ஆதாரங்களைப் பராமரிக்கும் பணிகளையும் செய்வதில்லை.

கரூர் மாவட்டத்தில் நீர்வள பாதுகாப்பு துறை அணைகள், குளங்கள், ஏரிகள் மற்றும் பாசனக் கால்வாய்களைப் பராமரித்தல் மற்றும் தூர்வாருதல், பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் உள்ள கரூர், தான்தோன்றிமலை, அரவக்குறிச்சி, குளித்தலை, கிருஷ்ணராயபுரம், க. பரமத்தி, தோகைமலை, கடவூர் ஆகிய 8 ஒன்றியங்களில் 12 ஆயிரத்திற்கும் அதிகமான குளங்கள், குட்டைகள் நீர்வரத்து பாதைகள், நீர் சேமிப்பு ஓடைகள் நீர் நிலைகள், பண்ணை குட்டைகள் உள்ளன.

தற்போது கோடை காலம் என்பதால் அனைத்து பொதுப்பணித் துறை கட்டுப்பாட்டில் நீர்நிலைகள், குளம், குட்டைகள் வறண்டு காணப்படுகிறது.

இதனை பயன்படுத்திகொண்டு பொதுப்பணித்துறை அதிகாரிகள் நீர்நிலைகளை பாதுகாத்திட கடந்த ஆட்சியின் போது நடவடிக்கை எடுத்து வந்தனர்.. குறிப்பாக கரூர் மாவட்டத்தில் பஞ்சப்பட்டி ஏரி, வெள்ளியணை குளம், ஜெகதாபி குளம், தாதம்பாளையம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பொதுப்பணித் துறை குளங்கள் சுமார் 100 ஏக்கருக்கு மேல் 500 ஏக்கர் நிலப்பரப்பு வரை அமைந்துள்ளது.

இன்னும் ஒரு மாதத்தில் பருவ மழை தொடங்கும் என்பதால் அதற்கு முன்பாக நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகள், முட்செடிகள் கழிவுகள் ஆகியவற்றை அகற்றி மழை நீர் முழுமையாக நீர்நிலைகளுக்குள் செல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடந்த திமுக ஆட்சியில் கரூர் மாவட்டத்தில் பல்வேறு நீர்நிலைகள், நீர் ஓடைகள் குளம், குட்டைகள் தூர்வாரப்பட்டு மழைநீர் வருவதற்கு வசதி செய்யப் பட்டது. தற்போது புதிதாக பெற்றுள்ள தமிழக வெற்றி கழக அரசு விவசாய நிலத்தில் அக்கறை கொண்டு நீர் நிலைகளை பாதுகாத்திட நடவடிக்கை எடுக்கவில்லை.

இது குறித்து குறை தீர்க்கும் கூட்டங்களிலும், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்திலும், தொடர்ந்து வலியுறுத்தி மனுக்களை அளித்தும் பேசியும் வருகிறோம். திங்கள் தோறும் நடைபெறும் குறைதீர்க்கும் கூட்டம், மாவட்டம் முழுவதும் நடைபெற்ற ஜமாபந்தி கூட்டம், குடிகள் மாநாடு மாதம் தோறும் நடைபெறும் விவசாயிகள் குறைவிற்கும் நாள் கூட்டம் என தொடர்ந்து கோரிக்கைகளை கூறி வருகிறோம். எனினும் பார்க்கிறோம் கேட்கிறோம் என்று தான் நிர்வாகத்திடம் இருந்து பதில் பதில் வருகிறது. புதிதாக இந்த த.வெ.க அரசு நிர்வாகத்திடம் எதையும் கேட்கவில்லை. வழக்கமாக மேற்கொள்கின்ற நீர் நிலைகளை பராமரிப்பு பணிகளை செய்ய வேண்டும் என்று தான் கேட்கின்றோம்.

போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு நீர்நிலைகளை பாதுகாக்கின்ற பணிகளை உடனடியாக தொடங்கிட வேண்டும் என கரூர் மாவட்ட விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

## தி.மு.க அரசின் சட்டமன்ற விவாதங்கள், நிர்வாக அனுபவங்களையும்

# மக்கள் நலத் திட்டங்களையும் ஆழமாகப் படித்து, உணர்ந்து ஆட்சி நடத்துக!

## மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் அறிக்கை!



**தஞ்சை, ஜூலை. 28- தமிழ்நாடு அரசும், அரசு அதிகாரிகளும் கடந்த கால தி.மு.க அரசின் ஆவணங்கள், சட்டமன்ற விவாதங்கள், நிர்வாக அனுபவங்களையும், மக்கள் நலத் திட்டங்களையும் ஆழமாகப் படித்து, உணர்ந்து ஆட்சி நடத்துக என்று மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:–

இன்று தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பில் இந்தியாவுக்கே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்றால், அதன் பின்னால் பல தலைமுறைகளின் உழைப்பும், தொலைநோக்குப் பார்வையும், திராவிட இயக்க ஆட்சிகளின் விவசாயக் கொள்கைகளும் உள்ளன.

ஒரு காலத்தில் தமிழகம் கடுமையான உணவுப் பஞ்சத்தால் துடித்தது. அன்றைய காங்கிரஸ் முதலமைச்சர் கு.காமராஜரை தொடர்ந்து திரு.எம்.பக்தவத்சலம் தலைமையிலான ஆட்சிக் காலத்தில் அரிசி தட்டுப்பாடு கடுமையாக இருந்தது. வாரம் ஒரு முறை மட்டும் ரேஷன் கடைகளில்அரிசி வழங்கியதால் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தனர். திருமண விழாக்களில் 25 பேருக்கு மேல் கலந்து கொள்ளக் கூடாது என்ற கட்டுப்பாடுகள், அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் ஆகியவை அந்தக் காலத்தின் நிதர்சனமாக இருந்தன. அந்தக் காலகட்டத்தில் மக்கள் கடும் பசியால் அவதிப்பட்டதாகவும், உயிர் வாழ்வதற்காக எலி போன்றவற்றையும் உணவாக பயன்படுத்தியதாகவும் பல அரசியல் உரைகளிலும் நினைவுக் குறிப்புகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அளவிற்கு உணவுத் தட்டுப்பாடு தமிழகத்தை வாட்டியது. இதனால் பஞ்சம் பிழைக்க பல மாவட்டங்களில் இருந்து தஞ்சைக்கு குடிபெயர்ந்து வந்துள்ளனர்.

அந்த இருண்ட சூழ்நிலையில் தான் 1967ஆம் ஆண்டு பேறிஞர் அண்ணா தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தது. "ரூபாய்க்கு மூன்று படி அரிசி; குறைந்தபட்சம் ஒரு படி நிச்சயம் என்று அறிவித்த அண்ணா, மக்களின் பசியை அரசியலாக அல்ல, மனித உரிமையாகப் பார்த்தார்.

அண்ணா தலைமையிலான அரசு, உணவுப் பஞ்சத்தைப் போக்குவதற்கு தற்காலிகத் தீர்வுகளை மட்டுமல்ல, நிரந்தரமான விவசாய வளர்ச்சிக்கான அடித்தளத்தையும் அமைத்தது. பசுமைப் புரட்சிக்கு தமிழகத்தில் ஊக்கம் அளிக்கப்பட்டது. ஒரு போக நிலங்கள் இரு போகமாகவும், இருபோக நிலங்கள் முப்போகமாகவும் மாற்றப்பட்டன. கிணறுகள் அமைக்கப்பட்டன. பாசன வசதிகள் விரிவுபடுத்தப்பட்டன. நிலத்தடி நீர் பயன்பாடு அதிகரிக்கப்பட்டது. கலைஞர் ஆட்சி காலத்தில் தான் கூட்டுறவு துறை மூலம் நவீனஅரிசிஆலைகள் வந்தன. கிராமங்களில் கூட்டுறவு அங்காடிகள் துவங்கப்பட்டது. தனியார் நெல் கொள்முதல் மூலம் விவசாயிகளிடம் கொள்ளை லாபம் சம்பாதித்ததால் தமிழ்நாடுநுகர்பொருள் வாணிககழகம் தொடங்கப்பட்டு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

விவசாயிகளுக்கு எளிதாக கடன் கிடைக்க நில வள வங்கிகள் மற்றும் கிராம கூட்டுறவு கடன் சங்கங்கள் போன்ற கூட்டுறவு நிதி அமைப்புகள் வலுப்படுத்தப்பட்டன. குறைந்த வட்டியில் கடன்கள் வழங்கப்பட்டன. விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தவும், பாசன வசதிகளை மேம்படுத்தவும் ஊக்குவிக்கப்பட்டனர். உழைக்கும் விவசாயியின் கையைப் பிடித்து உயர்த்திய ஆட்சி திராவிட ஆட்சியாகும்.

இந்த நடவடிக்கைகளின் விளைவாக தமிழகத்தில் உணவு உற்பத்தி பல மடங்கு உயர்ந்தது. ஒருகாலத்தில் பிற மாநிலங்களை நம்பி உணவு பெற்ற தமிழ்நாடு, தனது தேவையை முழுமையாக பூர்த்தி செய்ததோடு, பிற மாநிலங்களுக்கும் தானியங்களை வழங்கும் அளவிற்கு வளர்ச்சி பெற்றது. விவசாய உற்பத்தி, கூட்டுறவு வளர்ச்சி, பாசன மேம்பாடு ஆகிய துறைகளில் தமிழ்நாடு இந்தியாவின் பல மாநிலங்களுக்கு முன்னோடி மாநிலமாக விளங்கியது.

அந்த அடித்தளத்தை மேலும் வலுப்படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி. விவசாயம் வளர வேண்டும் என்றால் நீர் வளம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்து, வறட்சி காலங்களில் ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் தூர்வாரப்பட்டன; ஆழப்படுத்தப்பட்டன; அகலப்படுத்தப்பட்டன.

விவசாய இயந்திரமயமாக்கலுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. விவசாயிகளுக்குஆயில்இயந்திரம் , மின் மோட்டார்கள் வாங்க மாணியத்துடன் கடன் வழங்கப்பட்டது. பின்னர் அவர்களின் கடன் சுமையைக் குறைக்கும் வகையில் முழுகடனும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதுமட்டுமல்ல, விவசாயத்தின் உற்பத்திச் செலவைக் குறைக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க திட்டமாக விவசாயத்திற்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. இன்று வரை தமிழ்நாட்டு விவசாயத்தின் முதுகெலும்பாக விளங்கும் இந்தத் திட்டம், இந்தியாவின் பல மாநிலங்களுக்கும் முன்னோடி திட்டமாக அமைந்தது.

அதே வளர்ச்சிப் பாதையில் திராவிட மாடல் ஆட்சின் நாயகர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசும் பயணித்து வந்ததுடன். நீர்நிலைகளைப் புதுப்பித்தல், காவிரி டெல்டா பகுதிகளில் பாசன வசதிகளை மேம்படுத்துதல், விவசாயிகளுக்கான பல்வேறு நலத்திட்டங்களை விரிவு படுத்துதல், கூட்டுறவுத் துறையை வலுப்படுத்துதல், இயற்கை வளங்களை பாதுகாத்து எதிர்கால உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வது போன்ற பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக் கப்பட்டு வந்தது

இந்த வரலாறு நமக்கு ஒரு மிகப்பெரிய பாடத்தை கற்றுத் தருகிறது. நல்ல ஆட்சி என்பது தேர்தல் வெற்றியால் மட்டும் உருவாகாது; தொலைநோக்குப் பார்வை, திட்டமிடல், விவசாயிக்கு துணை நிற்கும் மனப்பான்மை, நீர்வளத்தை பாதுகாக்கும் நிர்வாகத் திறன் ஆகியவற்றின் மூலம் உருவாகிறது.

எனவே, தற்போதைய அரசும், அரசின் அதிகாரிகளும் கடந்த கால ஆவணங்கள், சட்டமன்ற விவாதங்கள், நிர்வாக அனுபவங்கள் மற்றும் முன்னோடிகளின் மக்கள் நலத் திட்டங்களை ஆழமாகப் படித்து, அதிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு, காலத்திற்கேற்ப புதிய திட்டங்களை உருவாக்க வேண்டும். வரலாற்றில் வெற்றி பெற்ற திட்டங்களை மக்களின் நலனுக்காக தொடர்ந்து செயல்படுத்த வேண்டும்.வெறும் சமூக வலைதளங்களில் அரசியல் செய்வதாலும், விளம்பரங்களில் சாதனைகளைச் சொல்வதாலும் மட்டும் ஒரு மாநிலமோ, ஒரு நாடோ முன்னேறாது. மக்களின் வாழ்க்கையை மாற்றும் திட்டங்கள், விவசாயத்தை காக்கும் கொள்கைகள், நீர்வளத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகள், உற்பத்தியைப் பெருக்கும் நிர்வாகம் ஆகியவையே உண்மையான வளர்ச்சியை உருவாக்கும். உணவுப் பஞ்சத்தில் தவித்த தமிழ்நாட்டை, உணவு வளம் மிக்க தமிழ்நாடாக மாற்றியது திராவிட ஆட்சிகள். பிறரை நம்பிய தமிழ்நாட்டை, பிற மாநிலங்களுக்கு தானியங்கள் வழங்கும் தமிழ்நாடாக உயர்த்தியது திராவிட ஆட்சிகள்.

அண்ணா அமைத்த அடித்தளத்தை கலைஞர் வலுப்படுத்தினார்; கலைஞர் உருவாக்கிய மக்கள் நலப் பாதையை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு தொடர்ந்து முன்னெடுத்து, விவசாயம், நீர்வளம், கூட்டுறவு மற்றும் மக்கள் நலத் திட்டங்களில் தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் வழிநடத்தி வந்தது தற்போதைய சோபா மாடல் அரசின் முதல்வர் அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் மக்களை காக்க திட்டங்களை தீட்ட வேண்டுமே ஒழிய தங்களை விமர்சிப்பவர்களை கைது செய்ய துடிக்க கூடாது என்று மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாண சுந்தரம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திருப்பூர் மாவட்டம் - பொங்கலூரில்

# ரூ.2.50 கோடி வீண் : பயன்பாட்டிற்கு வராத விதைச் சான்றளிப்பு அலுவலகம்!

## பழைய அலுவலகத்திற்கே அலைக்கழிப்பு!

திருப்பூர், ஜூலை. 28– பொங்கலூரில் ரூ.2.50 கோடியில் புதிதாக கட்டப்பட்ட விதைச் சான்றளிப்பு அலுவலகம் பயன்பாட்டிற்கு வராமல் சிதிலமடைந்து வருகிறது. உற்பத்தியாளர்களை பழைய அலுவலகத்திற்கே அலைக்கழித்து வருவதாகும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தாராபுரம் பகுதியில் 36க்கும் மேற்பட்ட விதை உற்பத்தி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. விதைக் களஞ்சியமான தாராபுரம் பகுதியில் இருப்பு வைக்கப்படும் தரமான நெல் வகைகளை தேர்வு செய்து முறைப்படி இயந்திரங்கள் மூலம் சுத்திகரிப்பு செய்யப்பட்டு விதைச்சான்று, அங்ககச் சான்று துறை மூலம் சான்றுகள் பெற்ற விதைகள் தமிழ்நாடு முழுவதும் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன.

இப்பகுதி உற்பத்தியாளர்கள் விதைச்சான்று பெறுவதற்காக கடந்த பல ஆண்டுகளாக கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கும், இதன்பின்னர் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு சென்று வந்தனர், இந்த அலுவலகங்கள் தாராபுரத்தில் இருந்து நீண்ட தூரத்தில் உள்ளதால் உற்பத்தியாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி வந்தனர்.

தமிழ்நாட்டின் மொத்த விதை உற்பத்தியில் 70 சதவீத உற்பத்தி பங்களிப்பு செய்து வருவதால் தாராபுரம் சுற்றுவட்டாரத்தில் விதைச் சான்றழிப்பு அலுவலகம் துவங்க வேண்டும் என விதை உற்பத்தியாளர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று பொங்கலூர் ஒழுங்குமுறை விற்பனை கூட வளாகத்தில் கடந்த ஆண்டு ரூ.2 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் விதைச்சான்றளிப்பு அலுவலகம் கட்டப்பட்டு திறப்பு விழா நடந்தது.

தற்போது ஒரு ஆண்டுகள் கடந்த நிலையிலும் புதிய அலுவலகம் பயன்பாட்டிற்கு வராமல் உள்ளது. இதனால் தற்போதும் விதை சான்று பெற வரும் விதை நெல் உற்பத்தியாளர்கள் சுமார் 60 கிலோ மீட்டர் பயணம் செய்து திருப்பூர் அலுவலகத்துக்கு நேரில் வந்து தேவையான ஆவணங்களை சமர்ப்பித்து அதன்பின் சான்று பெற்று திரும்புவது என்பது கால விரயத்தை ஏற்படுத்தி வருகிறது.

எனவே பொங்கலூரில் உள்ள புதிய கட்டிடத்திற்கு அலுவலகத்தை மாற்றம் செய்யாமல் இருப்பதன் காரணம் என்ன என விவசாயிகளுக்கும் விதை உற்பத்தியாளர்களுக்கும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. மேலும் புதிய கட்டிடத்தை கடந்த ஒரு வருட காலமாக பயன்படுத்தாமல் கிடப்பில் போடப்பட்டதால் உபயோகம் இல்லாத கட்டிடம் சிதிலமடைந்து அரசுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி வருகிறது. இதனால் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் விதை நெல்லுக்கு உரிய கொள்முதல் தொகையை வழங்குவதில் விதை நெல் உற்பத்தியாளர்கள் தாமதப்படுத்தப்பட வேண்டிய சூழ்நிலை விதை உற்பத்தியாளர்களுக்கு ஏற்படுகிறது. எனவே பொங்கலூரில் உள்ள புதிய விதை சான்றளிப்பு அலுவலகத்தை மாற்றுவது எப்போது என விதை உற்பத்தியாளர்களின் சார்பில் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

## கோவை – நல்லம்பாளையம் சாலையில் உள்ள

# நகர்ப்புற நலவாழ்வு மையத்தில் மருத்துவர் இல்லாததால் நோயாளிகள் அவதி!

கோவை, ஜூலை.28– கோவை கவுண்டம்பாளையம் – நல்லாம்பாளையம் ரோட்டில் உள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்தில் மருத்துவர் இல்லாத காரணத்தினால், பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்க முடியாத நிலை உள்ளது.

கோவை நல்லாம்பாளையம் சாலை ஜெயந்தி நகரில் மாநகராட்சியின் நகர்ப்புற நலவாழ்வு மையம் செயல்பட்டு வருகிறது. கடந்த 2023ஆம் ஆண்டில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நகர்ப்புற நலவாழ்வு மையத்தை கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார்.

இம்மையத்தில் கர்ப்பகால மற்றும் பிரசவகால சேவைகள், சிசு மற்றும் குழந்தைகள் நல சேவைகள், குழந்தைகள் (ம) வளரினம் மருத்துவத்திற்கான சேவைகள், தொற்று நோய் சிகிச்சை, தொற்றா நோய்களுக்கான சிகிச்சைகள், மன நோய், பல் நோய் உள்பட 12 சேவைகள் வழங்கப்படுகின்றன. இந்த மருத்துவ மையம் தினமும் காலை 8.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை மற்றும் மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை செயல்படுகிறது.

இம்மையத்தில் பணியாற்றி வந்த மருத்துவர் தன் சொந்த காரணத்திற்காக பணியில் இருந்து விலகிவிட்டார். இதையடுத்து, அந்த மையத்தில் மருத்துவர் இல்லாத நிலையில், அங்கு வரும் பொதுமக்களுக்குசிகிச்சை கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், மையத்திற்கு காலையில் 8.00 மணிக்கு ரத்த அழுத்தம், சுகர் போன்றவற்றை பார்க்க வரும் நோயாளிகளிடம் அங்கு பணியாற்றி வரும் செவிலியர், இப்போது டெஸ்ட் எடுக்க முடியாது. 9.00 மணிக்கு வாங்க, 10.00 மணிக்கு வாங்க என கூறி வருகிறார். இதனால், சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இம்மையத்திற்கு விரைந்து மருத்துவர் நியமனம் செய்ய வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில், ஜெயந்தி நகரில் உள்ள நகர்ப்புற நல வாழ்வு மையத்தில் மருத்துவர் நியமனம் செய்யப்பட்டு இருப்பதாகவும், அவர் ஓரிரு நாளில் பணியில் இணைய இருப்பதாகவும் மாநகராட்சி அதிகாரிகள் தரப்பில் தெரிவித்தனர்.



கோவை மாநகர் மாவட்டம், வேலாண்டிபாளையம் பகுதி, 36 வது வட்டக் கழக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் பகுதி கழக பொறுப்பாளர் எம்.கிருஷ்ணராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாநகர் மாவட்ட துணை செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.முருகன், பொதுக்குழு உறுப்பினர்கள் வடவள்ளி குப்புசாமி, தங்கம் சந்திரசேகர், மாநில தகவல் தொழில்நுட்ப துணை செயலாளர் அ.தமிழ்மறை, மேற்கு மண்டல தலைவர் தெய்வானை தமிழ்மறை, வட்டக் கழக பொறுப்பாளர்கள் விஸ்வநாதன், சிவக்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் மணி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# மாணவர்களுக்குத் தேவையற்ற 'நீட்' தேர்வை ரத்து செய்ய வேண்டும்!

## எஸ்.சி., எஸ்.டி. பணியாளர் சங்கம் வலியுறுத்தல்!

*சென்னை, ஜூலை 28- மாணவர்களுக்கு தேவையற்ற நீட் தேர்வை மத்திய அரசு ரத்து செய்ய வேண்டும் என்று எஸ்சி,எஸ்டி பணியாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.*

*தமிழ்நாடு அரசு தொழில்நுட்பக்கல்வித்துறை டாக்டர் அம்பேத்கர் எஸ்.சி,எஸ்.டி பணியாளர் நலச் சங்க மாநில பொதுச்செயலாளர் டேவிட் மகிமைதாஸ் வெளியிட்ட அறிக்கை:*

*நீட் தேர்வு குளறுபடிகள், நீட் தேர்வால் மாணவர்களின் மரணம் உள்ளிட்ட பல காரணங்களை எதிர்த்து டெல்லியில் ஆரம்பித்த மாணவர்களின் போராட்டம் இந்தியா முழுமைக்கும் பரவியதை அடுத்து, மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்துள்ளார் . இளைஞர்களுடைய தன்னெழுச்சி போராட்டம் வெற்றி பெற்றுள்ளது. நீட் தேர்வுக்கான எதிர்ப்பு போராட்டத்திற்கு மத்திய அரசு அடிபணிந்து உள்ளது.*

*10 நாட்களாக டெல்லியில் நடந்து வரும் பிரச்சனைகள் காவல் துறையினுடைய தடியடிகள் உயிரிழப்புகள் நீட் தேர்வு முறைகேடுகளுக்கு தார்மீக பொறுப்பேற்று மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்திருப்பதை தமிழ்நாடு அரசு தொழில் நுட்பக் கல்வித்துறை டாக்டர் அம்பேத்கர் எஸ்.சி, எஸ்டி பணியாளர் நலச்சங்கம் வரவேற்கிறது. மாணவர்களுக்கு தேவையற்ற நீட் தேர்வை ரத்து செய்ய மத்திய அரசு முன்வர வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.*

## கருத்துகளைத் தெரிவிப்பது – அமைதியாக

# மாணவர்கள் போராட்டம் நடத்துவது அடிப்படை உரிமை! கைது செய்யும் போக்கு கவலை அளிக்கிறது!

## போபாலில் உச்சநீதிமன்ற நீதிபதி உஜ்ஜால் பூயான் பேச்சு!

*போபால், ஜூலை 28- போபாலில் உள்ள தேசிய சட்டப் பல் கலைக் கழகம் நடத்திய நிகழ்ச்சியில் உச்ச நீதிமன்ற நீதிபதி உஜ்ஜால் பூயான் கலந்து கொண்டார்.*

*அதில் உரையாற்றிய அவர், அமைதியாகப் போராடுவதும், கருத்துக்களை தெரிவிப்பதும் அடிப்படை உரிமைகள் எனத் தெரிவித்தார்.*

*விவாதமும், மாற்று கருத்தும் ஜனநாயகத்தின் உயிர்நாடி என்றும் ஆனால், போராட்டங்கள் தற்போது குற்றச் செயல்களாகப் பார்க்கப்படுவதாகவும் கூறினார். கல்லூரிகளில் போராடும் மாணவர்கள் கூட கைது செய்யப்படுவதாகவும், 30, 40 நாட்கள் வரை அவர்கள் ஜாமின் இல்லாமல் சிறை வைக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.*

*மாணவர்கள் நீதிமன்றங்களில் தங்களுக்கான நிவாரணம் பெற நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டிய நிலை கவலையளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.*

*கங்கை நதிக் கரையில் இறைச்சி உண்பதை தடை செய்ய சட்டம் எதுவும் இல்லை என்ற நிலையிலும், அதனை குற்றமாக கருதி கைது செய்யப்பட்டவர்கள் மூன்று மாதங்கள் சிறையில் இருக்க நேரிட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், பொதுமக்கள் இதனை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்றும் கூறினார்.*